**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.262/2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw8/Pw4 |
| Name | : ராமசந்திரன் |
| Father/Husband's Name | : மணி |
| Village | :சிங்கபெருமாள்கோயில் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.08.2026.

**முதல் விசாரணை:**

நான் சென்டரிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 22.03.2023 ம் தேதி நான் வேலை செய்து கொண்டிருக்கும் போது போலீசார் ஆஜர் எதிரிகளை விசாரித்து கொண்டிருந்தார்கள். அதன்பிறகு என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். எதிரியிடம் இருந்து ஒரு வண்டியும், கத்தியும் கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அதசா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் அந்த கையொப்பங்களை மாலை 6.00 மணியளவில் போட்டேன். போலீசார் என்னை மெல்டோசர்புரம் கூட்ரோட்டில் வைத்து விசாரித்தார்கள். என்னுடன் கையெழுத்து போட்ட நபரின் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில்

உள்ள வாகனத்தை தான் போலீசார் கைப்பற்றினார்கள். அந்த புகைப்படம் **சா.பொ.1 (5 வரிசைகள்)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னால் கத்தியை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதில் உள்ளவிவரங்கள் என்ன வென்றால் எதிரிகளின் பெயர், முகவரி கேட்டார்கள். வெகு நாட்கள் ஆனதால் மற்ற விவரங்கள் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. போலீசார் என் முன்னிலையில் எந்தெந்த பொருட்கள் கைப்பற்றினார்கள் என்றால் ஒரு ஸ்கூட்டி மற்றும் கத்தி கைப்பற்றினார்கள். அந்த ஸ்கூட்டியின் பதிவு எண் எனக்கு தெரியாது. 22.03.2023ம் தேதி போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். நான் அவ்வாறு கையெழுத்து போடவில்லை என்றாலும், போட்டிருந்தால் கையெழுத்து போட்ட தேதியை சரியாக சொல்லியிருப்பேன் என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக கையெழுத்து போட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu